வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 15.1.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்திய ஜனநாயகத்தில் மகளிர் பிரதிநிதித்துவம் முக்கிய தூணாக திகழ்கிறது என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெயப்பூரில் 78-ஆவது ராணுவ தினம் இன்று கொண்டாடப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில் ஸ்டார்ட்-அப் இந்தியா திட்டத்தின் 10-ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார்.

அறுவடை திருநாளாம் பொங்கல் பண்டிகையை ஒட்டி முக்கிய தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மோடி-காமன் வெல்த்

இந்திய ஜனநாயகத்தில் மகளிரின் பிரதிநிதித்துவம் முக்கிய தூணாக திகழ்கிறது என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்ற அவைத் தலைவர்களின் 28-ஆவது மாநாட்டை இன்று புதுடெல்லியில் தொடக்கி வைத்துப் பேசிய அவர் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 15 லட்சம் பெண் பிரதிநிதிகள் உள்ளதாக தெரிவித்தார். நாடு முழுவதும் சுமார் நூற்றுக் கணக்கான மொழிகள் பேசப்படுவதை எடுத்துரைத்த பிரதமர் அனைவரையும் உள்ளடக்கிய தன்மை மற்றும் முழுமையான தன்மை ஆகியவை இந்திய ஜனநாயகத்தின் உண்மையான பலம் என கூறினார். நம்நாடு பன்முகத் தன்மையுடன் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார். எவ்வித பாகுபாடும் இன்றி கடைகோடி மக்களுக்கும் அரசின் நலத் திட்டங்களை கொண்டு சேர்ப்பது தான் இந்திய ஜனநாயகம் என்றும் பிரதமர் தெரிவித்தார். கடந்த சில நாட்களில் 25 கோடி மக்கள் வறுமையின் பிடியில் இருந்து மீண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் மக்களே முதன்மையானவர்கள் என்றும் அவர்களின் விருப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இந்தியா உலகின் மிகப் பெரிய தடுப்பூசி உற்பத்தியாளராகவும், உலகின் 2-ஆவது எஃகு உற்பத்தியாளராகவும் உள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார். காமன்வெல்த் சபாநாயகர்கள் மற்றும் பேரவைத் தலைவர்கள் மாநாடு நடைபெறுவது இது 4-ஆவது முறை என்றும் பிரதமர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் பேசிய மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, செயற்கை நுண்ணறிவு மற்றும் சமூக ஊடகங்கள் ஜனநாயக நிறுவனங்களின் செயல் திறனை, மேம்படுத்தி உள்ளதாகவும் கூறினார். செயற்கை நுண்ணறிவு மற்றும் சமூக ஊடகங்களின் தவறான பயன்பாடு, தவறான தகவல், சைபர் கிரைம், போன்ற கடுமையான சவால்களை உருவாக்கி உள்ளதாக தெரிவித்தார். இந்த சவால்களை தீவிரமாக பரிசீலித்து பொருத்தமான தீர்வுகளைக் கண்டறிவது அனைவரின் கூட்டு பொறுப்பு என்றும் அவர் வலியுறுத்தினார். இந்த மாநாட்டில் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து ஆழமான விவாதங்கள் நடைபெறும் என்றும் பின்னர் அதுதொடர்பாக உறுதியான கொள்கை முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*ராணுவ தினம்*

ராஜஸ்தான் மாநிலம் ஜெயப்பூரில் 78-ஆவது ராணுவ தினம் இன்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு ஜெய்ப்பூரில் ஜெகத்பூராவில் உள்ள மஹால் சாலையில் பிரம்மாண்ட அணிவகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த அணிவகுப்பு இந்திய ராணுவத்தின் வீரம், ஒழுக்கம், மற்றும் மேம்பட்ட ராணுவத் திறன்களை வெளிப்படுத்தியது. இந்நிகழ்ச்சியில் உள்நாட்டு ஏவுகணை அமைப்புகள், மேம்பட்ட டாங்கிகள், ராணுவ வாகனங்கள், டிரோன்கள், மற்றும் வான் எதிர்ப்பு ஆயுத அமைப்புகள் உள்ளிட்ட ராணுவத்தின் நவீன போர் தயார் நிலையின் ஈர்க்க கூடிய காட்சி இடம் பெற்றது. பல்வேறு படைப் பிரிவுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்று தங்கள் போர் திறமைகளை வெளிப்படுத்தினர்.

முன்னதாக ராணுவ தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி இந்திய ராணுவ வீரர்களுக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் ராணுவ வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். நாட்டின் ஒற்றுமை, இறையாண்மை, மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதில் இந்திய ராணுவம் உறுதியாக உள்ளது என்று குடியரசு தலைவர் திருமதி

திரவுபதி முர்மு தமது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார். பேரிடர்கள் மற்றும் மனிதாபிமான நெருக்கடியின் போது இந்திய ராணுவ வீரர்கள் நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதாகவும், முக்கிய உதவிகளை வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இந்திய ராணுவத்தின் தைரியம் மற்றும் உறுதியான அர்ப்பணிப்புக்கு தேசம் வணங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். சவாலான சூழ்நிலையில் தேசத்தை பாதுகாக்கும் தன்னலமற்ற சேவையின் அடையாளமாக ராணுவ வீரர்கள் திகழ்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டைபாதுகாப்பதில் இந்திய ராணுவத்தின் அசைக்க முடியாத தைரியம் மிக உயர்ந்த தியாகம் ஆகியவற்றிற்கு தேசம் வணக்கம் செலுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார். எல்லைகளில் எப்போதும் விழிப்புடன் இருக்கும் இந்திய ராணுவம் நெருக்கடியான காலங்களில் ஒழுக்கம் மற்றும் மனிதாபிமான சேவை மூலம் உலகளாவிய மரியாதையை பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ராணுவ தினம் குறித்த ஒரு செய்தி தொகுப்பு......

இந்திய ராணுவம் அதிகாரப் பூர்வமாக 1895-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. இந்திய ராணுவம் கிழக்கிந்திய கம்பெனியின் படைகளில்இருந்து உருவானது இது பின்னர் பிரிட்டிஷ் இந்திய ராணுவம் என்று அழைக்கப்பட்டது. இறுதியில் சுதந்திரத்திற்குப் பிறகு அது தேசிய ராணுவம் என்று அழைக்கப்பட்டது. இந்திய ராணுவம் 1895- ஏப்ரல் 1-ஆம் தேதி ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டது. ஆனால் இந்தியாவில் ராணுவ தினம் ஜனவரி 15-தேதி கொண்டாடப்படுகிறது.

*ஸ்டார்ட்-அப் திட்டம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் ஸ்டார்ட்-அப் இந்தியா திட்டத்தின் 10-ஆண்டுகளை குறிக்கும்

வகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். இந்த நிகழ்ச்சியின் போது இந்தியாவின் துடிப்பான ஸ்டார்ட்-அப் சுற்றுச் சூழல் அமைப்பின் உறுப்பினர்களுடன் பிரதமர் கலந்துரையாடுகிறார். பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக கடந்த 2016-ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி ஸ்டார்ட்-அப் இந்தியா திட்டம் தொடங்கப்பட்டது. இம்முயற்சியின் முக்கிய நோக்கம் இந்தியாவை வேலை தேடுபவர்களை விட வேலைகளை உருவாக்கும் நாடாக மாற்றுவதாகும். கடந்த 10-ஆண்டுகளில் இத்திட்டம் இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் கண்டுபிடிப்பு போன்றவைகளில் குறிப்பிடத் தக்க உந்து சக்தியாக மாற்றி உள்ளது.

*பொங்கல்-பிரதமர்*

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை இன்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. புதுவை, தமிழகம் மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் இப்பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இயற்கை, சூரியன் மற்றும் விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொங்கல் பண்டிகை, மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என 4 நாட்கள் இந்த பண்டிகைகளை தமிழர்கள் கொண்டாடுகின்றனர். சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இன்று அதிகாலை முதலே மக்கள் வண்ணக் கோலமிட்டு புதுப்பானையில் புத்தரிசி இட்டு சூரிய பகவானுக்கு படைத்து பொங்கலோ பொங்கல் என் முழக்கமிட்டு வழிபட்டனர். புத்தாடை அணிந்து இறைவனை வழிபட்டு மக்கள் ஒருவருக்கு ஒருவர் பொங்கல் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். வடமாநிலங்களிலும் இன்று பொங்கல் பண்டிகை மகரசங்கராந்தி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. வடமாநிலங்களில் நிலவும் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் மக்கள் புனித நீராடி மகரசங்கராந்தியை கொண்டாடி வருகின்றனர்.

பொங்கல் பண்டிகையை ஒட்டி பிரதமர் திருநரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு ஜெயக்குமார், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தமிழ் பாரம்பரியத்தின் உன்னதமான அடையாளமாக பொங்கல் பண்டிகை திகழ்வதாக தெரிவித்துள்ளார். பொங்கல் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி தமிழக மக்களுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ள அவர் இந்த பொங்கல் பண்டிகை இன்று சர்வதேச திருவிழாவாக கொண்டாடப்படுவதாக தெரிவித்தார். இந்த பொங்கல் பண்டிகை குறித்து தாம் மட்டற்ற மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மனிதனின் உழைப்பிற்கும் இயற்கையின் இசைவிற்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை இந்த பண்டிகை நமக்கு உணர்த்துவதாக அவர் தெரிவித்துள்ளார். வேளாண்மை, கடினமாக உழைக்கும் விவசாயிகள், கிராமத்து வாழ்க்கை முறை மற்றும் கண்ணியமான வேலை ஆகியவற்றுடன் இந்த பண்டிகை ஆழமாக பிணைந்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். இந்த பண்டிகை தமிழ் பாரம்பரியங்களின் உன்னதமான அடையாளமாக திகழ்வதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். உலகின் பழமையான மொழியான தமிழின் தாயகமாக இந்தியா திகழ்வதில் நாம் பெருமை கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். கடின உழைப்பின் மூலம் நமது வாழ்க்கை செம்மைபடுவதற்கு நன்றி தெரிவிக்கும் நாளாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்த தை மாதம் அனைவரது வாழ்விலும் செழிப்பு, வெற்றி மற்றும் நல்ல ஆரோக்கியத்தை கொண்டு வரட்டும் என்றும் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த பொங்கல் பண்டிகை குறித்து ஒரு செய்தி தொகுப்பு……

தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்று பொங்கல் பண்டிகை இயற்கையோடு ஒன்றி இணைந்து வாழ்வது தமிழரின் வாழ்க்கை முறையாகும். இயற்கையை வணங்குதல் தமிழரின் மரபாகும். தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கையை போற்றும் வகையிலேயே அமைந்துள்ளன. அவற்றுள் மிகவும் சிறப்பான பொங்கல் பண்டிகையாகும். இது தமிழர் திருநாள் என்றும் போற்றப்படுகிறது. பொங்கல் பண்டிகையின் முதல் நாளை போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. வீட்டில் உள்ள பயனற்ற பொருட்களை நீக்கி வீட்டை தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள், இன்று தை பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. இது அறுவடைத் திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்நாளில் மக்கள் வாசலில் வண்ண கோலமிட்டு மாவிலை தோரணம் கட்டி, புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம் நெய், முந்திரி சேர்த்து பொங்கலிட்டு

மகிழ்கின்றனர். பொங்கல் என்பதற்கு பொங்கி வருவது என்று பொருள். நாளை மாட்டுப் பொங்கல், மாடுகள் உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுவதால் உழவுக்கும் உழவர்களுக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் என அழைக்கப்படுகிறது. இந்நாளில் உற்றார் உறவினர் மற்றும் நண்பர் வீடுகளுக்குச் சென்று அவர்களை கண்டு மகிழ்வர். குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்கு சென்று மகிழ்ச்சியுடன் பொழுதை கழிப்பர். இயற்கை உழைப்பு நன்றி உணர்வோடு பாரம்பரியமான இந்த விழாவை அனைவரும் கொண்டாடி மகிழ்வோம்.

*ஈரான்*

ஈரானின் பாதுகாப்பு நிலமை மிகவும் மோசமாக உள்ளதால் ஈரானுக்கு பயணம் செய்வதை தவிர்க்குமாறு இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது. ஈரானில் நடந்து வரும் சம்பவங்களைக் கருத்தில் கொண்டு மறு அறிவிப்பு வரும்வரை ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கு பயணம் செய்வதை தவிர்க்குமாறு இந்திய குடிமக்களை வெளியுறவுத் துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. ஈரானில் வசிக்கும் இந்திய குடிமக்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் உரிய எச்சரிக்கையுடன் இருக்குமாறும், போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும் வெளியுறவுத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. ஈரானில் வசிக்கும் இந்தியர்கள் தூதரகத்தில் கட்டாயம் பதிவு செய்யுமாறும் வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கிடையில் ஈரானில் நடைபெற்று வரும் நிலவரங்களைக் கருத்தில் கொண்டு அங்குள்ள இந்திய குடிமக்கள், மாணவர்கள், யாத்ரிகர்கள், வணிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்டோர் வணிக விமானங்கள் உட்பட கிடைக்க கூடிய போக்குவரத்து வழிகள் மூலம் ஈரானை விட்டு வெளியேறுமாறு தூதரகம் வலியுறுத்தி உள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்திய ஜனநாயகத்தில் மகளிர் பிரதிநிதித்துவம் முக்கிய தூணாக திகழ்கிறது என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ராஜஸ்தான் மாநிலம் ஜெயப்பூரில் 78-ஆவது ராணுவ தினம் இன்று கொண்டாடப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில் ஸ்டார்ட்-அப் இந்தியா திட்டத்தின் 10-ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார்.

அறுவடை திருநாளாம் பொங்கல் பண்டிகையை ஒட்டி முக்கிய தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

-----------------------------